Registered as a Newspaper

அழகுக்கு அழகூட்டும்
22 கரட்டிலான
தங்க நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்!
ஓடர்நகைகள் குறித்த
தவணையில்
உத்தரவாதத்துடன் அழகுறச்
செய்து கொடுக்கப்படும்.
வரன் ஜுவலறி
உரிமையாளர்:
த. சிவப்பிரகாசம்
22, கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை
ரூ. 1-50

WELCOME
DEALERS IN
JEWELS
DIAMOND
and
SOVEREIGNS
VARAN
JEWELERY
Prop: T SIVAPPIRAKASAM
22, Kachchai Road.
CHAVAKACHCHERI

சுடர்: 3 யாழ்ப்பாணம் பிரபவ ஆண்டு மாசி மீ 20உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1408 ஜ ஆகிர் பிறை 13 (03 - 03 - 1988) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்: 18

மட்டக்களப்பு

## ● பெண்மணி ஒருவர் உண்ணாவிரதத்தை மீண்டும் கைவிட்டார்

மட்டக்களப்பில் சாகும்வரை உண்ணாவிரதமிருந்து வந்த பெண்களில் ஒருவரான திருமதி நேசம்மா வடிவேல் (50 வயது) தமது உண்ணாவிரதத்தை நேற்றுக் காலை (புதன்) கைவிட்டார் என்று ஏஜன்சிச் செய்திகள் தெரிவித்தன.

சம்பந்தப்பட்ட பெண்மணி, உண்ணாவிரதத்தை ஏன் கைவிட்டார் என்பது தெரியவில்லை என்றும் அச்செய்தி மேலும் தெரிவித்தது.

பத்து நாட்களாக உண்ணாவிரதமிருந்த திருமதி நேசம்மா வடிவேல், திருமதி அன்னம்மா டேவிட் (58 வயது) ஆகிய இருவரும் கடந்த ஞாயிற்றுக்கிழமை உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர். எனினும் அடுத்தநாள் செவ்வாய்க்கிழமை மீண்டும் ஆரம்பித்திருந்தனர்.

திருமதி அசஸ்கின் 35 வயது), திருமதி பூபதி கணபதிப்பிள்ளை (48 வயது) ஆகிய இருவரும் செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் மேலதிகமாக உண்ணாவிரதத்தில் சேர்ந்து கொண்டனர்.

திருமதி நேசம்மா வடிவேல் நேற்று உண்ணாவிரதத்தை மீண்டும் கைவிட்ட போதிலும் மற்றும் மூவரும் அதனைத் தொடர்வதாக அறிவிக்கப்பட்டது.

# ஸ்ரீலங்கா சிப்பாய்கள் எண்மர் நித்திரையில் சுட்டுக் கொலை!

## சக சிப்பாய் ஒருவர் வெறிகொண்டு நடத்திய திடீர்த் தாக்குதல்

கொழும்பு மார்ச் 3

இலங்கை இராணுவச் சிப்பாய் ஒருவர் சண்முடித்தனமாக சுட்டதில் எட்டு சக இராணுவச் சிப்பாய்கள் உயிழந்தனர். பத்துச் சிப்பாய்கள் படுகாயமடைந்தனர்.

காயமடைந்த இராணுவ அதிகாரி ஒருவர் திருப்பிச் சுட்டதில் அந்த இராணுவச் சிப்பாய் கொல்லப்பட்டார்.

கொழும்பில் இருந்து 16 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள அத்துகிரிய இராணுவ முகாமில் நேற்றுப் புதன்கிழமை நள்ளிரவு 12-45 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:

இராணுவ முகாமில் சிப்பாய்கள் உறங்கிக் கொண்டிருந்தனர். வெறிகொண்டு சுட்ட சிப்பாய் முகாம் வாசலில் காவலில் இருந்தார்.

திடீரென்று அச்சிப்பாய் தனது கையில் இருந்த துப்பாக்கியால் நித்திரையில் இருந்த சக சிப்பாய்கள் மீது சுடத்தொடங்கினார்.

முப்படி 50 தடவைகளுக்கு மேல் அச்சிப்பாய் சுட்டார்.

பின்னர் அங்கிருந்த ஏனைய சிப்பாய்களுக்கு உரிய துப்பாக்கிகளையும் எடுத்து, அச்சிப்பாய் சுட ஆரம்பித்தார்.

காயமடைந்த சிப்பாய்களில் ஒருவர் எப்படியோ சமாளித்து, சுட்ட சிப்பாய் மீது திருப்பிச் சுட்டு அவரைக் கொன்றார்.

கொல்லப்பட்ட சிப்பாய் பாவித்த துப்பாக்கிகள் அனைத்தும் ரி. 56 ரகத்தைச் சேர்ந்தவை.

இச்சம்பவம் நடந்த சிறிது நேரத்தில் அப்பகுதியில் இருந்து இரண்டு மோட்டார் சைக்கிள்கள் வேகமாகப் புறப்பட்டுச் சென்றனவாம். (ஓ-எ)

யாழ்ப்பாணத்துக்கு

## எரிபொருள்களுடன் நேற்று வந்தது ரயில்!

யாழ்ப்பாணம், மார்ச் 3

எரிபொருள் ரயில் நேற்று யாழ்ப்பாணம் ரயில் நிலையம் வந்து சேர்ந்தது.

நேற்றுப் பகல் ஒருமணி அளவில் மண்ணெண்ணெய், டீசல் ஆகியவற்றை ஏற்றிக்கொண்டு யாழ் ரயில் நிலையத்தை வந்து அடைந்தது.

இருபத்தோராயிரம் லீற்றர் டீசலும், இருபத்தோராயிரத்து நானூறு லீற்றர் மண்ணெண்ணெயும் கொண்டுவரப்பட்டன.

இலங்கை மின்சார சபைக்குத் தேவையான எரிபொருளும் ஐயாயிரத்து எண்ணூறு லீற்றர் எடுத்துவரப்பட்டுள்ளது.

சுமார் மூன்று வருடங்களுக்கு மேலாக யாழ்ப்பாணத்துக்கான எரிபொருள் ரயில் சேவை நிறுத்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ஓ-9-10)

## ● ஜே.வி.பி முகாம் முற்றுகை

அக்குரஸ்ஸ தொகுதியில் ஜே.வி.பி தீவிரவாதிகளின் பதுங்குமிடம் ஒன்றை இலங்கைப் பொலிஸார் கடந்த ஞாயிறு முற்றுகை இட்டனர்.

22 சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்ததுடன் 22 ஷொட்கன்கள், 2 ரைபிள்களையும் கைப்பற்றினர். (ஓ-எ)

# தமிழர் விவகாரத்தில் புதிய அணுகுமுறை

# கோரி சென்னையில் மாநாடு

## அகில இந்திய ரீதியில் நடக்கும்

-சென்னையிலிருந்து அலுவலகச் சிறப்புப் பிரதிநிதி: ந. வித்தியாதரன்-

சென்னை, மார்ச் 3

**இலங்கைத் தமிழர் விவகாரத்தில் இந்திய அரசு புதிய அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும். இவ்வாறு வலியுறுத்துவதற்காக அகில இந்திய ரீதியில் இம்மாதம் சென்னையில் மாநாடு ஒன்று நடைபெற இருக்கிறது.**

தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி, ஜனதாத் தலைவர் ஜோர்ஜ் பெர்னாண்டஸுடன் நடத்திய பேச்சுக்களின்போது இம் முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இலங்கைத் தமிழர் விவகாரத்தில், இந்திய அரசு இப்போது மேற்கொண்டுள்ள நிலைப்பாடு உகந்ததல்ல. அது ஆட்சேபத்துக்கு உரியது. எனவே இது விடயத்தில் புதிய அணுகு முறையை மத்திய அரசாங்கம் கடைப்பிடிக்க வேண்டும் — என்பதை வலியுறுத்துவதே அகில இந்திய ரீதியான இந்த மாநாட்டின் நோக்கமாக இருக்கும் என்று அறிவிக்கப்படுகிறது.

கர்நாடகம், ஆந்திரம், ஹரியானா மாநிலங்களின் முதலமைச்சர்களான திரு. ராமகிருஷ்ண ஹெக்டே, திரு என். டி ராமராவ், திரு. தேவிலால் ஆகியோரையும் —

ஜனதா தலைவர் திரு. சந்திரசேகர், ஜன மோர்ச்சத் தலைவர் திரு வி. பி. சிங், திரு மதுலிமாயி, மேற்கு வங்காள முன்னாள் அமைச்சர் அசோக் மித்ரா, டாக்டர் சுப்பிரமணிய சுவாமி ஆகியோரையும் இம் மாநாட்டுக்கு அழைப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது. (அ-எ)

## தொண்டாவின் சுயசரிதை நூலை பிரேமா வெளியிட்டார்

கொழும்பு, மார்ச் 3

அமைச்சர் தொண்டமானின் சுயசரிதைப் புத்தகம் நேற்று வெளியிடப்பட்டது.

கொழும்பு ஹில்டன் இன்டர் நாஷனல் ஹோட்டலில் இவ்வெளியீட்டு விழா இடம்பெற்றது.

பிரதமர் திரு பிரேமதாஸ நூலை வெளியிட்டு வைத்தார்.

தொண்டமான் நிதிய மும் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. நிதியத்தின் முதல் தொகையாக பத்து லட்சம் ரூபா வைப்புச் செய்யப்பட்டது (ஓ-எ)

# ஊரடங்கு நேரத்தில் வெளியில் நடமாடாதீர்!

## அமைதிப்படை அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 3

ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும்போது பொதுமக்கள் வெளியில் நடமாடாதிருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு இந்திய அமைதிப்படைத்தலைமை அலுவலகமான பலாலியில் இருந்து பத்திரிகைகளுக்கு விடுக்கப்பட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

★ அமைதியையும், இயல்பான நிலைமையையும் கொண்டு வருவதற்காகத்தான் இந்திய அமைதிப்படை இலங்கை வந்துள்ளது என்பதை பொதுமக்களுக்கு உறுதியாகத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது

★ இந்திய-இலங்கை உடன்பாடு முழுமையாக செயலாக்கத்தில் கொண்டு சென்று, சாதாரண நிலைமையை மறுபடியும் வடக்கு, கிழக்கு பகுதிகளில் கொண்டு வரும் வரை இந்திய அமைதிப்படை இலங்கையில் தான் இருக்கும்,

★ பொது மக்கள், தங்களின் எந்தவிதமான புகார்களையும் அருகாமையிலுள்ள அமைதிப்படை முகாமில் சமர்ப்பிக்கலாம்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

## ★ ஸி - 90க்குப் 'பாஸ்'

யாழ்ப்பாணம், மார்ச் 3

அத்தியாவசிய சேவையாளர்களுக்கும், அத்தியாவசிய தேவைகளுக்கும் மட்டுமே ஸி. 90 மோட்டார் சைக்கிள்களுக்கு 'பாஸ்' வழங்கப்படும்.

இதற்கான ஏற்பாடுகளை இந்திய அமைதிப்படை அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.

''கிளச்'' மொடல் இல்லாத ஸி. 90 மோட்டார் சைக்கிள் வைத்திருப்போர் தமது அத்தியாவசிய சேவை பற்றிய விவரங்களை இந்திய அமைதிப்படை முகாம்களில் தெரிவித்து அங்கு பாஸ் பெற முடியும். [இ-9-10]

யாழ். ஆஸ்பத்திரி பொலிஸில்

## முறைப்பாட்டு பிரதிகளை பெற்றுக்கொள்ளலாம்

யாழ்ப்பாணம், மார்ச் 3

யாழ் - ஆஸ்பத்திரி பொலிஸ் பிரிவில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சேதவிவரம் பற்றிமுறைப்பாடுசெய்தவர்கள் எவ்வேளையிலும் முறைப்பாட்டுப் பிரதிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

தற்பொழுது முறைப்பாடுகளை சமர்ப்பிப்போர் இரண்டு தினங்களில் முறைப்பாட்டுப் பிரதிகளைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே முறைப்பாடுகளை சமர்ப்பித்து முறைப்பாட்டு பிரதியை பெறுவதற்காக திகதி கொடுக்கப்பட்டோர்தற்பொழுது பொலீஸ் பிரிவில் முறைப்பாட்டுப் பிரதியைப்பெற்றுக் கொள்ள முடியும் என பொலிஸ் அதிகாரிஒருவர் தெரிவித்தார். (ஓ-10)

முச்சந்தி முரளி



கடந்த அஞ்சு வருஷமாய் அப்பவிச் சமிழரை சுடுக் கொன்ற பழக்க தோஷமாய் இருக்குமோ...!

## யாழ். அன்னையர் சனியன்று அடையாள உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், மார்ச் 3

மட்டக்களப்பில் உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ள அன்னையர் முன்னணியினருக்கு ஆதரவாக யாழ் அன்னையர் முன்னணியினர் அடையாள உண்ணாவிரதப்போராட்டம் ஒன்றை நடத்த உள்ளனர்.

மட்டக்களப்பு அன்னையர் முன்னணியினர் முன்வைத்துள்ள யுத்தநிறுத்தம் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை என்பவற்றை வலியுறுத்தி மேற்கொள்ளப்படும் இந்த உண்ணாவிரதப் போராட்டம் எதிர்வரும் 5ஆம் திகதி [சனிக்கிழமை] நல்லூர் கைலாசபிள்ளையார் ஆலய முன்றலில் காலை 7.00 மணிக்கு நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

உண்ணாவிரதத்தில் தவறாது பங்களிப்பதன்மூலம் மட்டக்களப்பு அன்னையர் முன்னணியினருக்கு நமது ஏகோபித்த ஆதரவை வழங்குவதுடன், நமது நாட்டில் வெகு விரைவில் நிரந்தர சமாதானமும், சுபீட்சமும் ஏற்பட வழி வகுப்போம் என்று யாழ் அன்னையர் முன்னணியினர் தெரிவித்துள்ளனர். [இ-9]

## 75 மாணவர்கள் கோவில், மசூதிகளில்

கொழும்பு, மார்ச் 3

பேராதனைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் மாணவர்கள் கண்டியில் இந்துக் கோவில்களிலும் பள்ளிவாசல்களிலும் தங்க வைக்கப்படுவர்.

இவர்களில் 30 பேர் மாணவிகள்.

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் இருந்து மாணவர்களை வெளியேறும்படி கடந்த ஞாயிறு பல்கலைக் கழக நிர்வாகம் உத்தரவிட்டது தெரிந்ததே.

கடந்த ஞாயிறு சுமார் 500 மாணவர்கள் பல்கலைக் கழகத்துக்குள் நுழைந்து வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 75 தமிழ், முஸ்லிம் மாணவருக்குப் பாதுகாப்பு வழங்கும்படி பல்கலைக் கழக நிர்வாகிகளைக் கேட்டுக் கொண்டனர்.

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் நிலவும் சீரற்ற நிலைமை காரணமாக அவர்கள் வீடு திரும்ப முடியாத நிலையில் இருப்பதாக நிர்வாகத்துக்கு தெரிவிக்கப்பட்டது. (ஓ-எ)

## இலங்கை அகதிகள்: முடிவு செய்யும் பொறுப்பு ஐ. நா ஆணைக் குழுவிடம்

கொழும்பு, மார்ச் 3

மேற்கு நாடுகளில் உள்ள இலங்கை அகதிகளுக்குத் தேவையான உணவு, உடை வசதிகளைச் செய்து கொடுப்பதே சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பணி அந்த அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதா, இல்லையா என்பது பற்றித் தீர்மானிக்க வேண்டியது ஐ. நா. அகதிகள் ஆணைக் குழுவின் பொறுப்பு;

இப்படி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் டாக்டர் மரியோ லாந்தர் தெரிவித்தார்.

கொழும்பில் செய்தி

(4-ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு அகதிகளை பதிவு செய்ய கோரிக்கை

சென்னை, மார்ச் 3

யாழ். குடாவில் தங்கியுள்ள கிழக்கு மாகாண அகதிகள், தங்கள் பெயர்களை யாழ் கச்சேரியில் உதவி அரச அதிபரிடம் பதிவுசெய்யும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் பழைய இடங்களில் அவர்களைக் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று சென்னையில பாதுகாப்பு அமைச்சு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (இ-எ)

## பூசை வழிபாடு

திருகோணமலையில் உள்ள திருக்கோணேஸ்வராலயம் பூசை வழிபாடுகளுக்கு நேற்றுத் திறந்து விடப்பட்டது

வன்செயல்களைத் தொடர்ந்து கடந்த செப்டம்பரில் பூசை வழிபாடுகள் நிறுத்தப்பட்டிருந்தன. (இ-எ)

## சுபநேரம்

03- 03- 1988
மாசி 20
வியாழக்கிழமை
சுபநேரம்: 7.57 முதல் 9.27 வரை
ராகுகாலம்: 1.57 முதல் 3.27 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.
பூரணை விரதம்

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ சின்னஞ்சிறு விளம்பரம் ★

### கல்வி

88 O/L) சித்திரை மீட்டல் வகுப்பு ஆரம்பம் 05-03-88 காலை 9 மணி சப்பியன் கல்வி நிலையம்.

### கம்பியூட்டர் கல்வி

பல்கலைக்கழக அனுமதி பெற்ற பல்கலைக்கழக மாணவர்களுக்கான குறுகிய காலத்தில் குறைந்த கட்டணத்தில் பிரத்தியேக கம்பியூட்டர் பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகின்றன. ஆரம்பம்: 7-03-88 Unikco Computer Centre, No. 5, மின்சார நிலைய வீதி, 2ஆவது ஒழுங்கை, யாழ்ப்பாணம். (உபதபாற்கந்தோர் அருகாமை)

### ரேனியோ

கிளீன் - கட் உங்களை என்றும் வரவேற்கின்றது. ரேனியோ வேலைகளுக்கு என்றும் நீங்கள் நாடும் இடம் கிளீன் - கட் இல. 239 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

### உணவு

Welcomes you to Hotel de Galaxy (Unavagam) (கலக்ஸி உணவகம்) நகரின் மத்தியிலே சுவையான மதிய, இரவு உணவு வகைகளை அருந்த நாடுங்கள்—Galaxy No.30 கஸ்தூரியார் ரோட் (சிவன்கோயில்முன்பாக) யாழ்ப்பாணம். We Look after you Better (1 93)

### தவறிவிட்டது

திரு. V. செல்வராஜா ஆகிய எனது அடையாள (இல 320150248V) அட்டையும் சாரதி லைசன்சும் சச்சேரிக்கும் றக்கா வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உடன் கொக்குவில் மேற்கு. கொக்குவில் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும், தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

### தேவை

மர வியாபார மரம் அரிவு நிலையத்திற்கு கணக்காளர் தேவை. நடுத்தர வயதினர், முன் அனுபவம் உள்ளோர் விரும்பத்தக்கது. அண்மையில் வசிப்போருக்கு முன் உரிமை வழங்கப்படும். தேவி அரிவுத் தொழிற்சாலை, ஸ்தாபகர் அமரர் நா. செல்லையா சங்கானை.

பிளேட்டின் மெசின் மைண்டர், அச்சுக்கோர்ப்பாளர், கட்டரில் வேலை செய்யத்தக்கவர், எழுதுவினைஞர் தேவை விஜய அழுத்தகம், 551. காங்கேசன்துறை வீதி. யாழ் நகர். (1611)


அசம்பாவிதங்களால் பாதிக்கப்பட்ட

# கூட்டுறவுச் சங்கங்கள் நிவாரணம் பெறும்

காங்கேசன்துறை மார்ச்3 யாழ் குடா நாட்டில் அசம்பாவிதங்களால் பாதிக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு கூடிய விரைவில் நிவாரணம் பெற்றுக் கொடுக்கவும் இலவச உணவு விநியோகித்தால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியைச் சமாளிக்க நிதி உதவி செய்யவும் ஏற்பாடுகளை மேற் கொள்ளுவதென யாழ் அரசாங்க செயலகத்தில் இடம் பெற்ற மாநாடொன்றில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் தலைமையில் இம் மாநாடு நடைபெற்றது

மாநாட்டில் கூட்டுறவு உதவி ஆணையாளர், உணவுத் திணைக்கள உத்தியோகத்தர்கள், தேசிய கூட்டுறவுச் சபை பிரதிநிதிகள் ஆகியோர்கலந்து கொண்டனர்.

இக்கட்டான காலகட்டத்திலும் மக்களுக்கு அத்தியாவசிய பொருட்களை பெரும் சிரமத்தின் மத்தியில் வழங்கி உதவி கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்ச்சியான அசம்பாவிதங்களால் பெரிதும் பாதிக்கப்பட்டு நெருக்கடிக்குள்ளாகியிருப்பதால் அவற்றுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கப்பட வேண்டுமென்று மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது.

இது குறித்து கூட்டுறவுத் திணைக்களத்துடனும் அரசுடனும் தொடர்பு கொண்டு விரைவில் நிவாரணம் பெற்றுக் கொடுப்பதென்று மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

இலவச உணவு விநியோகத்தினால் ப நோ. கூ. சங்கங்கள் நிதிநெருக்கடிக்கு உள்ளாகமல் இருக்க யாழ் குடாநாட்டில் உள்ள ப நோ கூ சங்கங்களுக்கு குறிப்பிட்ட அளவு நிதிஉதவி செய்வதென்று தீர்மானிக்கப்பட்டது. (இ—6ஜ)

## பிரதமர் நன்கொடை

பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மாகிரட் தாட்சர் இருபதினாயிரம் ரூபா பெறுமதியான மருந்து வகைகளை பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்துக்கு நன்கொடையாக வழங்கியிருக்கின்றார்.

பின்தங்கிய கிராமங்களுக்கான நடமாடும் இலவச மருத்துவச் சேவை டாக்டர். ஆ பாலகிருஷ்ணரின் தலைமையில் மார்ச் முற்பகுதியில் ஆரம்பமாகும். (இ—எ)

## கும்பாபிஷேகத்தில் சித்ரூபானந்தா

சென்னை, செங்கல்பட்டு ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் புதிய கோவில் கும்பாபிஷேக விழாவில் பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதாசேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தாவும் கலந்து கொண்டார்.

கல்கத்தா, பேலூர் இராமகிருஷ்ண மடத் தலைவர் சுவாமி கப்பிரானந்தர் 20 லட்ச ரூபா பெறுமதியான அழகிய குருதேவரின் கோவில் கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்தார். (ஒ—எ)


குறுகிய காலத்தில் குறைந்த கட்டணத்தில்
கம்பியூட்டர் கல்வி

**Computer Programming In Basic**

பயிற்சிக்காலம்: 40 நாள்
ஆரம்பம்: 7-03-88
கட்டணம் 750/- மாத்திரம்
O/L படித்த இருபாலாரும் சேரலாம்.
சான்றிதழ் வழங்கப்படும்.
விண்ணப்ப முடிவு நாள்: 6-3 88

**Unikco Computer Centre**
NO. 5 மின்சார நிலைய வீதி, 2ஆம் ஒழுங்கை
யாழ்ப்பாணம்
(உபதபாற்கந்தோர் அருகாமையில்)



### தேவை

மாங்குளத்தில் தென் இந்திய திருச்சபையால் நடாத்தப்படும் தொழிற் கல்வி நிலையத்திற்கு தமிழ் தட்டச்சு, சுருக்கெழுத்து படிப்பிப்பதற்கும் மற்றும் தையல் பழக்குவதற்கும் ஆசிரியர்கள் தேவை இப்பதவிகளுக்குத் தகுதியுடையோர் கீழ்க்காணும் முகவரிக்கு இம்மாதம் 20ஆம்திகதிக்கு முன்னதாக விண்ணப்பிக்கவும். தகுதிக்கும் அனுபவத்திற்கும் ஏற்ப சம்பளம் கொடுக்கப்படும்.

அருட் திரு டீ.எஸ் தியாகராஜ,
தென்.இந்திய திருச்சபை,
மாங்குளம். (1795)

### யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்

100 மாணவர் இரும்புக் கதிரைகளும் 100 மாணவர் மேசைகளும் செய்வதற்கான கேள்விப் பத்திரம் கோரப்படுகின்றது. 10-03-88 க்கு முன் சகல விண்ணப்பங்களும் அனுப்பிவைக்கப்பட வேண்டும். மேலதிக விபரங்கள் நேரில்.

மு. இராமலிங்கம்
அதிபர்
(1611)

# சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் (வரையுள்ளது) சுன்னாகம்
## பகிரங்க ஏல விற்பனை

மேற்படி சங்கத்தின் பாவனையிலிருந்து கழிக்கப்பட்ட 90 அடி நீளமான அஸ்பெஸ்ரோஸ் கூரைச் சீற்றுகள் 5-3-1988 ஆந் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் சங்க தலைமை நிலைய முன்றலில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என அறியத் தருகின்றோம்.

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்,
சுன்னாகம். 01-03-88
—பொதுமுகாமையாளர்

# பிரயாண ஒழுங்குகள்

## 1. KUWAIT:

1. CLEANERS — 100
2. WAITERS — 30 (மூன்று வருட அனுபவச் சான்றிதழ்)
3. HOUSE DRIVER — சாப்பாடும் தங்குமிடவசதியும் இலவசம்

## 2. SAUDI AIRPORT CLEANERS:-

1 CLEANERS வயது 21 — 44 வரை
2 DRIVERS Open Visa 30 — வயது 25 — 47
சாப்பாடும் தங்குமிட வசதியும் இலவசம்

## 3. SAUDI ARABIA:

(1) CLEANERS
(2) OFFICE BOY — 1
(3) DRIVERS
(4) LABOURERS
(5) AG. LABOURERS — (சுயத்தொழில் அனுபவம்)
(6) MASON
(7) CARPENTERS
(8) PLUMBERS — வயது 21 — 49
(9) ELECTRICIANS — சாப்பாடும் -
(10) SECURITY — தங்குமிடவசதியும் இலவசம்
(11) MECHANICS

மு. கு: மேற்கண்ட தொழில் வாய்ப்பின் விபரமறிய எமது ஸ்தாபனத்துடன் நேரடியாகத் தொடர்புகொள்ளவும்.

**★ T. V. TRAVELS ★**
**Brown Road, Kokuvil**


வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.

## கேள்வி அறிவித்தல் - 1988

எம்மால் 4-2-88 ஆம் திகதி 'ஈழநாடு' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தலைத் தொடர்ந்து கீழ் குறிப்பிடப்பட்ட கடைகள், சந்தைகளுக்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 19-3-88 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிவரை விசேட ஆணையாளர் வலி-தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப் பத்திரங்கள் யாவும் குறிப்பிட்ட பிரதேசசபையின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் கேள்வி வைப்புப்பணம் கேள்விப்பத்திரப்பணம் ஆகியன செலுத்துவதன் பேரில் 18-3 88 ஆம் திகதி சபை அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும்.

மேலதிக விபரங்கள் அறிய விரும்பின் வலிதெற்கு பிரதேசசபை அலுவலகத்தில் சாதாரண வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம்.

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம். 29-2-88.

ஆ. மகாலிங்கம்
விசேட ஆணையாளர்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை.

வலி-தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் உப-அலுவலகம்.

| குத்தகையின் தன்மை | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்புப் பணம் | மதிப்பிடப் பட்டபணம் |
|---|---|---|---|
| 1. மீ.3 கருவாட்டுக்கடை (சந்தை) | 25/ | 100/- | 1,800/- |
| 2. மீ.5 கருவாட்டுக்கடை (சந்தை) | 25/- | 100/- | 2,000/- |
| 3 உடுவில் ஆலடிச் சந்தை | 50/- | 500/- | 8000/- |
| 4. மேல்மாடிச்சந்தைக்கடை | 50/- | 1,000/- | 70,000/- |
| **வலி-தெற்கு பிரதேச சபை, உடுவில் உப-அலுவலகம்** | | | |
| 1. மருதனார்மடம் சந்தை | 50/- | 1000/- | 1,75.900/ |
| 2 இணுவில் சந்தை | 50/- | 1000/- | 10,000/- |
| 3. உடுவில் மல்வம் மாட்டிறைச்சிக்கடை | 25/- | 100/- | 8000/- |
| 4. தாவடி தெற்கு மாட்டிறைச்சிக்கடை | 25/- | 100/- | 7000/- |
| **இணுவில் சந்தை வெளிக்கடைகள்** | | | |
| 5. இல. 1,2 | 25/- | 100/- | 600/- |
| 6. இல. 7/A | 25/- | 100/- | 300/- |
| 7. இல. 11 | 25/- | 100/- | 350/- |
| **வலி-தெற்கு பிரதேசசபை, ஏழாலை உப-அலுவலகம்** | | | |
| 1. ஏழாலை தெற்கு சந்தை | 25/- | 50/- | 260/- |
| 2 குப்பிளான் சந்தை | 25/- | 100/- | 800/- |
| 3. ஏழாலை மத்திய சந்தை | 15/- | 50/- | 25/- |
| 4. ஏழாலை ஆட்டிறைச்சிக் கடை | 25/- | 50/- | 500/- |

ஆ. மகாலிங்கம்
விசேட ஆணையாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை.


## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

★  ★

திரு. சி. தாமோதரம்பிள்ளை

அன்னையின்மடியில்: 1929-04-13 விதியின் அழைப்பில்: 1988-02-02

மாவிட்டபுரத்தைச் சேர்ந்தவரும் பலாலியில் வசித்தவரும், இளைப்பாறிய அரசினர் வைத்தியசாலை பரிசாரகருமான சி. தாமோதரம்பிள்ளை 02-02-88 இல் அமரரானார் 04-03-88 வெள்ளிக்கிழமை காலை 10 மணி அளவில் நடைபெறும் சபிண்டீகரண கிரியையிலும் மதிய போசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

குறிப்பு:- சூழ்நிலை காரணமாகத் தனிப்பட்ட மரணச் செய்தியனுப்ப முடியாமைக்கு வருந்துகின்றோம். இறுதிக் கிரியையில் கலந்து கொண்டவர்களுக்கும், உதவி புரிந்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

மனைவி ஆ. தாமோதரம்பிள்ளை
திரு. திருமதி சந்தானகோபால்
மகன்மார் தயாபரன் (சவூதி அரேபியா)
ஜெயதரன் (டென்மார்க்)
தெல்லிப்பளை மேற்கு, தெல்லிப்பளை.

## 90 ஆம் நாள் நினைவு அஞ்சலி!



இராசதுரை பஞ்சாட்சரம்
உரிமையாளர்: அருள் முருகன் ஜுவலர்ஸ்
96/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
முல்லை வீதி, புதுக்குடியிருப்பு.

தோற்றம்: 18-11-1936
மறைவு: 4-12-1987

நேசக்கரம் நீட்டி நித்தம் எம்மை அணைத்த
பாசக்குணக் குன்றே! பாவிகளாய் நாமிருக்க
தேகம்தனை விட்டே தெய்வமாய் ஆகிவிட்டாய்.
வேகும் எம் இதய வேதனையை நீ அறியாய்.

தங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்

கற்குழி,
சாவகச்சேரி.

அன்பு மனைவி,
அருமைச் செல்வங்கள்,
அன்பு மருமகன்.
(1609)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

பொன், பொருளை இழப்பதல்ல தியாகம்; ஆசைகளை அழிப்பதே தியாகம்.
— பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா

**உதயன்**
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:-292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம் 22073
03.3.1988 த.பெ.இல:-23

# பொன்னான தருணம்

மாகாணசபைத் தேர்தல் வடக்கு, கிழக்கு உட்பட ஐந்து மாகாணங்களில் காலவரையறையின்றி ஒத்திப்போடப்பட்டு விட்டது.

அவசர அவசரமாக மாகாண சபைத் தேர்தலை நடத்த நினைத்த அரசு - அவ்வாறு காட்டிக் கொண்ட அரசு - நியமனப்பத்திரங்களை ஏற்பதற்கு நிர்ணயித்த தினத்துக்கு முதல் நாள் இரவே, ஒத்திவைப்பையும் அறிவிக்க வேண்டியதாயிற்று!

வடக்கு, கிழக்கு மக்களைப் பொறுத்தமட்டில் இந்த ஒத்தி வைப்புச் செய்தி மகிழ்ச்சியையே தரும். இந்த இரண்டு மாகாணங்களிலும் தேர்தலை நடத்துவதற்கான உகந்த சூழ்நிலை இன்னும் தோன்றவில்லை என்பதை எல்லோருமே ஒப்புக்கொள்வார்கள்.

இரண்டு மாகாணங்களிலும் மக்கள் அச்சமின்றி, நிர்ப்பந்தம் இன்றி, தாமாகவே மனம்விரும்பி ஒரு சுதந்திரமான தேர்தலில் வாக்களிக்கும் சூழ்நிலைக்கான கருவேனும் இன்னும் சூல் கொள்ளவில்லை என்பதே அரசியல் அவதானிகளின் மதிப்பீடு.

மாகாணசபைத் தேர்தல் என்ன, பொதுத் தேர்தல் என்ன, எதனை நடத்துவதாயினும் நாட்டில் அமைதியான சூழ்நிலை இருக்க வேண்டும்.

அதனை உருவாக்குவதற்கான முயற்சி எதிலும் சரிவர ஈடுபடாமல் தேர்தலை நடத்துவதற்கு அவசரம் காட்டுவதில் பயன் இல்லை.

வடக்கு, கிழக்கில் அமைதியை நிலைநாட்டும் பொறுப்பு இந்திய அமைதிப்படையிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. தெற்கிலும், மேற்கிலும் அமைதியைப் பேணும் பொறுப்பு இலங்கைப் பாதுகாப்புப்படைகளுக்கே உண்டு.

வடக்கு-கிழக்கில் அமைதிச் சூழ்நிலை சரிவர உருவாகுவதற்குத் தடையாக இருப்பது இந்தியா அரசு — விடுதலைப்புலிகள் பிணக்கு. தெற்கு—மேற்கில் அமைதிச் சூழ்நிலை சரிவர உண்டாவதற்குத் தடையாக இருப்பது இலங்கை அரசு—ஜே. வி. பி பிணக்கு.

இந்த இரு பிணக்குகளுக்கும் இராணுவத் தீர்வு சரியான வழியல்ல. அரசியல் ரீதியான, பேச்சுவார்த்தை மூலமான தீர்வும் இணக்கமுமே உகந்தவை.

இந்திய அரசு — விடுதலைப் புலிகள் பிணக்குக் தீர்வதற்கு சிறு இடைவெளியே உண்டு எனத் தோன்றுகிறது. ஆகக் கடைசியாக விடுத்த அறிக்கையிலும், தாம் இந்திய அரசுடன் நிபந்தனையற்ற முறையில் பேசுவதற்குத் தயார் எனப் புலிகள் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்திய அரசு ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும் என்ற நிபந்தனையை முன் நிறுத்தியே பேச்சுவார்த்தை நடத்த விரும்புகிறது.

விடுதலைப் புலிகளைத் தவிர்த்து தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்பது இயலாத காரியம் என்பதைப் பொதுமக்கள் பிரதிநிதிகள் பலரும் இந்திய அரசுக்கும், அமைதிப்படை உயர் அதிகாரிகளுக்கும் எடுத்துக் கூறி இருப்பதாக அறிகிறோம்.

மாகாண சபைத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்ட தருணத்தை ஒரு பொன்னான சந்தர்ப்பமாகத் தருணமாகக் கருதி —

வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் மக்களின் நலனை முன்னிறுத்தி —

இருதரப்பாரும் சமரசத்துக்கு வர வேண்டும் என்பதே மக்கள் விருப்பமாகும்.

சமரசம் விரைந்து வர வேண்டும். அது தாமதமாகத் தாமதமாக, தமது கஷ்டங்கள் பெருகி விடும் என்ற கவலையும் தமிழ் மக்களுக்கு உண்டு.

1987 மே வரைக்கும் இராணுவத் தீர்வில் நம்பிக்கை வைத்ததன் மூலம், தமிழ்ப் பகுதிகளில் விட்ட தவறை, இலங்கை அரசு, தெற்கு மேற்கிலும் இழைக்காது, ஜே.வி.பி. மீது விதித்த தடையை நீக்கி, பேச்சுவார்த்தைகள் மூலம் அங்கும் சமரசம் காணப்படவேண்டும். அதற்கு இரு சாராரும் விட்டுக்கொடுத்து வாங்கும் அணுகுமுறையை அனுசரித்தல் அவசியம்.



**பொய்யாமொழி**

**குறள்:**

ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை.

**பொருள்:**

சோர்வு இல்லாத ஊக்கம் உடையவனிடத்தில் ஆக்கமானது தானே அவன் உள்ள இடத்திற்கு வழிகேட்டுக் கொண்டு போய்ச் சேரும்.

பங்களாதேஷ்:

# உலகின் எந்தச் சக்தியாலும் பொதுத் தேர்தலை நிறுத்த முடியாது

## எர்ஷாத் சூளுரை

டாக்கா, மார்ச் 2

நாடாளுமன்றத் தேர்தல் திட்டமிட்டபடி நடைபெறும். உலகின் எச்சக்தியாலும் அதைத் தடுத்துநிறுத்த முடியாது.

இப்படி பங்களாதேஷ் ஜனாதிபதி முகமது எர்ஷாத் சூளுரைத்தார்.

பங்களாதேஷ் நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் எதிர்வரும் வியாழன் (மார்ச் 3) நடத்தப்பட உள்ளது.

பங்களாதேஷ் உதயமான 17 வருடங்களில் நடத்தப்படும் நான்காவது பொதுத் தேர்தல் இதுவாகும்.

சுதந்திரம்பெற்ற பின்னர் ஒரு நாடாளுமன்றமும் மூழு ஆயுட் காலத்தையும் கழிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

21 எதிர்க்கட்சிகள் இத்தேர்தலைப் பகிஷ்கரிக்கப் போவதாக அறிவித்துள்ளன.

ஜனாதிபதி எர்ஷாத் பதவி விலக வேண்டும் என்பதே எதிர்க்கட்சிகளின் ஒரே கோரிக்கை ஆகும்.

பொதுத் தேர்தலின் போது பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட 9,000 இராணுவத்தினரும் 3 லட்சம் பராதுருப்புக்களும் அழைக்கப்பட்டுள்ளன. (எ)

# ஆப்கானிஸ்தானுக்கு 'இறக்குமதி' அரசு வேண்டாம்

## ஜனாதிபதி நஜிபுல்லா கூறுகிறார்

இஸ்லாமபாத், மார்ச் 2

பாகிஸ்தானால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் ஒன்றை ஆப்கானிஸ்தான் ஏற்காது.

இப்படி ஆப்கன் ஜனாதிபதி நஜிபுல்லா தெரிவித்தார்.

இஸ்லாமபாத்தில் இருந்தோ அல்லது லண்டனில் இருந்தோ இறக்குமதி செய்யப்படும் அரசு எமக்கு வேண்டாம்— இப்படி ஜனாதிபதி நஜிபுல்லா சொன்னார்.

இதனிடையில் ஜெனிவாவில் பாகிஸ்தானுக்கும் ஆப்கானிஸ்தானுக்கும் இடையே மறைமுகப் பேச்சுக்கள் ஐ. நா மேற்பார்வையில் ஆரம்பமாகியுள்ளன. (எ)

# தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலை வன்னியர் சமூகம் பகிஷ்கரிக்கும்

சென்னை, மார்ச் 2

தமிழக சட்டசபைத் தேர்தலை வன்னியர் சமூகம் பகிஷ்கரிக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வன்னியர் தலைவர் டாக்டர் எஸ் ராமதாஸ் இந்த அறிவிப்பை வெளியிட்டிருக்கின்றார்.

மாநிலத்தில் வேலை வாய்ப்பு இருபது சதவீதமும் மத்தியில் 2 சதவீதமும் வன்னியர் சமூகத்துக்கு வழங்கப்பட வேண்டும் என்று அண்மையில் கிளர்ச்சி நடத்தப்பட்டது தெரிந்ததே.

வன்னியர் சமூக நலன்களைக் கவனிக்க அரசியல் கட்சிகள் தவறி விட்டன.

அதனால்தான் தேர்தலைப் பகிஷ்கரிக்கத் தீர்மானித்திருக்கின்றோம் — இப்படி டாக்டர் ராமதாஸ் தெரிவித்தார். (எ)

# பனாமாவை அமெரிக்கா பலவீனப்படுத்தியது

பனாமா, மார்ச் 2

பனாமாவைப் பலவீனப்படுத்தும் வேலையில் அமெரிக்கா 55 கோடி டாலரைச் செலவழித்தது.

இப்படித் தலைமறைவான ஜனாதிபதி எரிக் டெல்வாலே குற்றஞ்சாட்டினார்.

திரு டெல்வாலே நாடாளுமன்றத்தினால் அண்மையில் பதவி நீக்கஞ் செய்யப்பட்டார் என்பது தெரிந்ததே. (எ)

**வெளி உலகில்**

பிலிப்பீன்ஸில்

# நிலக்கண்ணி வெடிக்கு 14 சிப்பாய்கள் பலி!

மணிலா, மார்ச் 2

நிலக் கண்ணிவெடித் தாக்குதலில் 14 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

பிலிப்பீன்ஸில் இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

நிலக்கண்ணியை கம்யூனிஸ்ட் கிளர்ச்சிக்காரர்கள் புதைத்துவைத்திருந்தனர் என்று பிலிப்பீன்ஸ் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

அண்மைக் காலத்தில் இடம்பெற்ற மிக மோசமான கண்ணிவெடித் தாக்குதல் இது என்று கூறப்படுகின்றது. (எ)

மத்திய கிழக்கு:

# அமெ. முயற்சிகளுக்கு அரபாத் கண்டனம்

டமாஸ்கஸ், மார்ச் 2

மத்திய கிழக்கு சம்பந்தமாக அமெரிக்கா எடுத்து வரும் சமரச முயற்சிகளை பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத் கண்டித்திருக்கிறார்.

இதனிடையில் அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் ஜோர்ஜ் ஷுல்ட்ஸ் மீண்டும ஜோர்தானுக்குப் பயணமானார்.

எகிப்து, இஸ்ரவேல் அரசுத் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்திய பின்னரே திரு ஷுல்ட்ஸின் ஜோர்தான் பயணம் தீர்மானிக்கப்பட்டது.

மத்திய கிழக்குப் பிரச்சினைக்கு தீர்வு காணும் அமெரிக்க முயற்சிகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. (எ)

**அபூர்வ மிருகங்கள் அழிவின் மர்மம்**

போஸ்டன் மார்ச் 2

உலகில் கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் 'டினோசார்ஸ்' என்ற அபூர்வ மிருகங்கள் வாழ்ந்தன. பருமனில் நீண்ட கழுத்தவாலுடன் முதலை போன்ற தலை அமைப்பைக்கொண்டவை இந்த மிருகங்கள்.

இப்போது இவற்றின் இனம் உலகில் அடியோடு இல்லாமல் அற்றுப் போய்விட்டது.

ஆறரைக் கோடி ஆண்டுகளுக்கு முன் எரி நட்சத்திரம் உருகி பூமியில் விழுந்தபோது திரவமழை உண்டாகி அவற்றில் இந்த டினோசார்ஸ் அழிந்துவிட்டன. ஆழமான வளைகளுக்குள் இருந்த மற்ற விலங்குகள் அடியில் சுண்ணும்புப் பாறை அமைந்த ஏரிகளுக்குள் பதுங்கிக் கொண்ட நீர் விலங்குகள் ஆகியவை மட்டும் இந்த திரவ மழைக்குத் தப்பியதாக அமெரிக்காவைச் சேர்ந்த ரொனல்டு ஜிபிரின் என்ற நிபுணர் கூறுகிறார்.

டெஹ்ரான் - பக்தாத் மோதல்

# சகிப்புத் தன்மையைக் கடைப்பிடிக்க ஐ. நா. அவசர வேண்டுகோள்!

வாஷிங்டன், மார்ச் 2

சகிப்புத் தன்மையைக் கடைப்பிடித்துப் போர் நிறுத்தம் ஒன்றுக்கு உடன்படும்படி ஈரான், ஈராக் நாடுகளை ஐ. நா. பொதுச்செயலாளர் அவசர வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

ஐ. நா. பாதுகாப்புச் சபையும் அவசரமாக இரகசியக் கூட்டம் ஒன்றை நடத்தியது. அதன் பின்னர், யுத்த நிறுத்தத்துக்கு உடன்பாட்டுக்கு உடன்படும்படி பாதுகாப்புச் சபையும் வேண்டுகோள் விடுத்தது. பாதுகாப்புச் சபையில் 15 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

இதனிடையில் ஈரான், ஈராக் தலைநகரான பக்தாத்தின் மீது செவ்வாய் இரவு மூன்று ஏவுகணைகளை ஏவியது.

30 மணித்தியாலங்களில் 17 ஏவுகணைத் தாக்குதலை ஈராக் மேற்கொண்டது. அதற்குப் பதில் நடவடிக்கையாகவே ஈரானின் செவ்வாய் இரவுத்தாக்குதல் நடந்தது. இத்தாக்குதலில் பல பொதுமக்கள் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

சோவியத் யூனியன் வழங்கிய ஆயுதங்களைக் கொண்டு ஈராக் தாக்குதல் நடத்துவதாக ஈரான் குற்றஞ்சாட்டியது.

தெஹ்ரானில் உள்ள சோவியத் தூதரை அழைத்து ஈரான் தனது ஆட்சேபனையைத் தெரிவித்தது.

ஈராக்கின் தாக்குதலை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமானால், ஆயுதத் தடையை ஈரான் ஏற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக வளைகுடா வட்டாரங்கள் தெரிவித்தன. இதனிடையில் டெஹ்ரான், பக்தாத் நகரங்களில் இருந்து தங்கள் பிரஜைகளை வெளியேறுமாறு வெளிநாடுகள் கோரியுள்ளன. (எ)

# பனாமா வேலைநிறுத்தம்

பனாமா, மார்ச் 2

இராணுவத் தளபதியை பதவி விலகக் கோரி பனாமாவில் நடத்தப்படும் வேலைநிறுத்தத்தில் சூடு பிடிக்கின்றது.

வர்த்தக, வங்கி நிலையங்கள் மூடிக்கிடக்கின்றன.

பொலிஸார் அதிக அளவில் வீதிகளில் நடமாடுகின்றனர். (எ)

# மூப்பனார் வருங்கால முதல்வர் என சுவரொட்டிகளை ஒட்டியது ஏன்?

## நெடுஞ்செழியன் கேள்வி

— சென்னையிலிருந்து எமது அலுவலகச் சிறப்புப் பிரதிநிதி ந. வித்தியாதரன்—

சென்னை, மார்ச் 2

மூப்பனார் வருங்கால முதல்வர் என்று சுவரொட்டி ஒட்டியது ஏன்?

நெடுஞ்செழியன் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

சென்னை மயிலை மாங்கொல்லையில் ஜெயலலிதா அணி அ. தி. மு. க. பொதுக் கூட்டம் நடந்தது.

இந்தக் கூட்டத்தில் நெடுஞ்செழியன் பேசியதாவது:

இன்றைக்கு நாம் அ. தி. மு. கவில் இருந்து பிரிந்து எம் ஜி ஆர். அ. தி மு. கவாக வந்து அவர் புகழைச் சொல்லிக்கொண்டிருக்கிறோம்.

**ஆட்சிக்கு வருவது எப்படி?**

தமிழகத்தில் தனிப் பெரும்பான்மை வருகிற அளவுக்கு இடங்களில் போட்டியிடுகிற கட்சி தான் ஆட்சிக்கு வரமுடியும்.

இதைச்சொன்னால்காங்கிரஸ்காரர்கள் 'லபோ லபோ' என்று அடித்துக் கொள்கிறார்கள்.

1967இல் அண்ணா. 1971இல் கருணாநிதி. 1977இல் எம். ஜி. ஆர். அதிக இடங்களில் போட்டியிட்டதால் தான் ஆட்சியைப் பிடித்தனர்.

118 இடத்துக்கு மேல் வெற்றி பெற்றால்தான் தனிப் பெரும்பான்மை கொண்ட ஆட்சி அமைக்க முடியும். இல்லையேல் மற்றவர்களில் தொங்க வேண்டும்.

எனவே ஆட்சிக்கு வர விரும்புகிற கட்சி 156 இடங்களிலாவது போட்டியிடவேண்டும். சரிபாதி தொகுதி பங்கீடு என்றால் 1980இல் தி. மு. க காங்கிரஸ் கூட்டணிக்கு ஏற்பட்ட நிலை தான் ஏற்படும்.

எம். ஜி. ஆர் ''பார்முலா'' அதுதான் சட்டசபைத் தேர்தலில் நமக்கு 156. காங்கிரசுக்கு 78 என்ற பங்கீடு நெறிமுறை அப்படியே தொடரவேண்டும் என்று தான் நான் சொல்கிறேன். இதில் என்ன தப்பு? தொண்டர்கள் சிந்திக்கவேண்டும்.

2 கட்சி தொண்டர்களும் மகிழ்வோடு ஏற்கின்ற தொகுதி பங்கீடு ஏற்படும் என்று ஜெயலலிதா தனது பேட்டியில் குறிப்பிட்டு [illegible]

இருக்கவேண்டுமானால் மூன்றில இரண்டு பங்கு இடம் எங்களுக்கு ஒதுக்கப்படவேண்டும் என்பதே என் எண்ணம்.

ஆனால் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் பதவியை ஏற்றதும் மூப்பனார் என்ன சொல்கிறார்? காங்கிரஸ் ஆட்சியைப் பிடிக்க முயலுமா என்று நிருபர்கள் கேட்டதற்கு 'எந்தக் கட்சியானாலும் தங்கள் கட்சிதான் முழுமையாக வெற்றி பெற விரும்பும் என்று கூறியிருக்கின்றார்.

**நமது ஆசை தவறு?**

காங்கிரசுக்கு முழுமையாக வெற்றிபெறவேண்டும். ஆட்சிக்கு வர வேண்டும் என்கிற எண்ணம் இருக்கும்போது, அதேபோன்ற ஆசை நமக்கும் இருப்பது தப்பா? தொண்டர்களே யோசியுங்கள்?

இப்போது அ தி மு. க. உடைந்துவிட்டது. இதைப் பயன்படுத்தி ஆட்சியைப் பிடிக்க காங்கிரஸ் [illegible] என்றும் காங்கிரஸ் தலை[illegible]கின்

றார்கள்.

சோணகிரிகளா?

அவர்கள் எண்ணம் எப்படி இருக்கின்றது பாருங்கள் தொண்டர்களே. அ. தி. மு க. உடைந்ததைப் பயன்படுத்தி ஆட்சியை அவர்கள் பிடிப்பார்களாம். நாம் சோணகிரிகளாக இருக்கலாமா? சிந்தியுங்கள்?

2 கட்சித் தொண்டர்களும் மகிழ்கிற மாதிரி முடிவு என்றால் எனக்கும் மகிழ்ச்சிதான். ஆனால் மூப்பனார் சொல்வதைப் பார்த்தால் மகிழும்படியாக இல்லையே! தொண்டர்கள் யோசிக்க வேண்டும்.

**வருங்கால முதல்வர்**

மூப்பனார் தமிழக காங்கிரஸ் தலைவராகப் பொறுப்பேற்க வரும் போது அமைக்கப்பட்டிருந்த வளைவுகள், ஒட்டப்பட்டிருந்த போஸ்டர்கள் எல்லாவற்றிலும் வருங்கால முதல்வரே வருக! நல்லாட்சி தருக!! என்ற வாசகங்கள் இருந்தன.

மூப்பனார் முதல்வராக வரவும் காங்கிரஸ்ஆட்சி ஏற்படவும் காங்கிரஸார் ஆசைப்படலாம். அதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு. ஆனால் நடக்கிற விஷயங்களைப் பார்க்கிறபோது இரு கட்சித் தொண்டர்களும் மகிழ்கிற முடிவு எப்படி ஏற்பட இயலும்?

**மக்களைபற்றிக் கவலை இல்லை**

எம். பி சுப்பிரமணியம் காங்கிரசை விட்டு விலகியபோது என்ன சொன்னார் டில்லி காங்கிரஸ் தலைவர்களுக்கு தமிழக மக்களைப்பற்றிக் கவலை இல்லை.

எப்படியாவது தமிழகத்தில் அதிகாரத்தைக் கைப்பற்றவே நினைக்கிறார்கள் என்று எம். பி. எஸ். கூறியிருக்கிறார். இதை ஞாபகம் வைத்திருங்கள் மறந்துவிடாதீர்கள்.

இப்படி அவர் கூறினார். (உ)

**தமிழகத்திலிருந்து**

சுன்னாகம்

# பழனி முருகன் ஸ்தாபக 4 ஆம் ஆண்டு பூர்த்தி தின விழா

யாழ்ப்பாணம், மார்ச் 3

சுன்னாகம் பழனி முருகன் ஆலய நான்காம் ஆண்டு பூர்த்தி விழா இன்று பழனி முருகன் சந்நிதானத்தில் வெகுசிறப்பாக நடைபெறுகிறது.

விழாவில் விசேஷ ஆராதனைகளும், அபிஷேகங்களும் மிகப் பெரிய அளவிலான அன்னதானம் ஒன்றும் நடைபெற உள்ளன.

1984 ஆம் ஆண்டு இந்த திகதியில் ஆரம்பிக்கப்பட்ட மேற்படி சந்நிதானத்தில் சகல அசம்பாவிதங்களில் கூட பூசைகள், பஜனைகள் இடைநிறுத்தப்படாது தொடர்ந்து நடத்தப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

இதன் தனிச் சிறப்பாக எவ்வித கட்டணமோ காணிக்கையோ, சீட்டோ இன்றி முருகனை தரிசிக்க வரும் எல்லா பக்தர்க்கும் இலவசமாக விபூதி, மலர்கள் பிரசாதம் என்பன வழங்கப்பட்டு 'வேல்' சிரசில் வைத்து ஆசீர்வதிக்கப்பட்டும் வருகிறது. (இ-27)

**அன்னதானம்**

யாழ்ப்பாணம், மார்ச் 3

யாழ் நீராவியடி கடையிற் சுவாமி சமாதிச் சிவன் கோவிலில் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு நாளை காலை 10 00 மணிக்கு உருத்திர கும்பாபிஷேக தீபாராதனைகள் நடைபெற வுள்ளன.

அதைத் தொடர்ந்து நண்பகல் 12 30மணிக்கு அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்படும். (அ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேட்டிங் சூட்டிங்ஸ்
* குழந்தைகளுக்கான ஆடைகள்
* சகல விதமான றெடிமேட்
ஆடைகளுக்கும்
யாழ்நகரில்
மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, யாழ்நகர்.



# உதயன்

03 - 03 - 1988 வியாழக்கிழமை



திருமண வைபவங்களுக்கேற்ற
* மணிப்புரி
* பெனாரஸ்
* காஞ்சிபுரம்
சேலைகளைப் பெற்றுக் கொள்ள
மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, யாழ்நகர்.


## நீத்தார் பட்டியல்

### சொர்ணம்மா

தோற்றம்: 1902-09-23 மறைவு: 1988-02-27

அராலி வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற கைலாசங்கிரி பத்மநாதனின் மனைவி திருபதி சொர்ணம்மா காலமானார். அன்னார் சிவசுப்பிரமணியத்தின் தாயாரும் காலஞ்சென்ற விஜயலட்சுமியின் மாமியாரும், சிவனேஸ்வரி, ரட்ணகுமார் (கனடா) இராஜேந்திரம் சொர்ணலக்ஷ்மி, ஸ்ரீ கிருஷ்ணகுமார் (யாழ்ப்பாணக் கல்லூரி) டிலீப்குமார் வீரலட்சுமி ஆகியோரின் அப்பாச்சியும் இராகுலன், மீனுஜினியின் பீட்டியுமாவர். அன்னாரின் ஈமக்கிரியைகள் 28-02-88ல் அவரது இல்லத்தில் நடைபெற்று அராலி கிழக்கு தாழையடி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:- இராஜேந்திரம். (1794)

### அந்தோனிப்பிள்ளை பீற்றர்

ஊர்காவற்றுறை சென் அந்தனிஸ் ஸ்ரோர்ஸ் உரிமையாளரும் முன்னைநாள் முகத்துவார வைலா ஸ்ரோர்ஸ் பங்காளருமாகிய திரு அந்தோனிப்பிள்ளை பீற்றர் அவர்கள் 01-3-88 அன்று அசால மரணமானார். இவர் திருமதி ரோஸ்மேரி செலினின் அன்புக் கணவரும் செல்வன் ஜோன்சன், செல்வன் யூட்சன், செல்வி ஜயந்தினி, செல்வி ஜெனோதினி ஆகியோரின் அன்புத் தந்தையும் திரு அ முத்தையாவின் அன்பு மகனும் திரு முத்தையா லீனஸ், காலஞ்சென்ற திரு முத்தையா பயஸ்நோபேட் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை, முத்தையா தம்பதிகளின் அன்பு மருமகனும் செல்வன். ரேச்நீ-கிலஸ், செல்வன் ஜோண் கில்பேட் (அவுஸ்திரேலியா) செல்வன் பிலேமின் (லண்டன்) திருமதி அமைமேரி சில்வேஸ்டர் (கனடா) செல்வி திரேசா (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

இவரது மரணச் சடங்குகளின் விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
மனைவி-பிள்ளைகள்

### ஏ. தியாகராஜா

மீசாலை வடக்கு கொடிகாமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஏ. தியாகராஜா (சுமதி பொற்தொழிற்சாலை) 29-2-88ல் காலமாகி விட்டார். அன்னார் காலஞ்சென்ற ஏரம்பு (வஞ்சிப்பத்தர்) நாகம்மா ஆகியோரது மூத்த புதல்வனும் இந்திரமலரின் அன்புக் கணவரும் சுகுமார (கனடா), சுமதி, சுசந்தி, சுகாகரன் (கனடா), சுசர்சன் (சிங்கப்பூர்) சுசித்திரா, முருகதாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார் இவர் கணபதிப்பிள்ளை சுப்பிரமணியன் கொற்றபொத்தானை), மகேஸ்மணி, செல்வராஜா (ஸ்டார் ஜுவலறி புத்தளம்) ஆகியோரது அன்புச் சகோதரரும் ஆவார். அன்னாரது ஈமக்கிரியைகள் 3-3-88 காலை 10-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

"கலையரசி"
மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

### திருமதி லலிதா ஜெகநாதன்

திருமதி லலிதா ஜெகநாதன் காலமாகி விட்டார். இவர் தியாகராஜா ஜெகநாதன் (ஐற்கின் சன்ட் ஸ்பென்ஸ் லிமிடெட் யாழ்ப்பாண முகாமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், பிரதீபா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ஜனார்த்தனன் (பரியோவான் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சா. தம்பிஐயா (மலயன் பென்ஷனர்) திருமதி தம்பிஐயா ஆகியோரின் ஏக புத்திரியும், காலஞ்சென்ற பொ. தியாகராஜா (முன்னாள் யாழ்ப்பாண இந்துக் கல்லூரி விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர்) திருமதி தியாகராசா ஆகியோரின் அன்பு மருமகளும் ஆவர்

அன்னாரின் பூதவுடல் இன்று வியாழக்கிழமை பகல் 11 00 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

50. செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
தி. ஜெகநாதன்


உஷா சினிமா
பிரபு - கார்த்திக் - ஜனகராஜ்
"உரிமை கீதம்"
புதிய வெளியீடு - ஒரிஜினல் பிரதி



JAFFNA ENGLISH ACADEMY

(A LUX IN TENEBRIS)

**TOEFL**

A new batch commencing on 10th March.
Lectures on Mondays, Wednesdays 9 to 11 a.m.
Duration: 3 Months
Course Fee: Rs. 250/- only
Lectures: KANDIAH NAVARENDRAN

**● HIGHER ENGLISH COURSE:** (a crash course)

An integrated approach to the study of English encompassing the important aspects of English language and literature

**The Syllabus Comprises the following:**

(a) Shakespeare's Romeo & Juliet (original text)
(b) Bernard Shaw's Arms And The Man (original text)
(c) Charles Dickens's Hard Times (original text)
(d) Essays and Letter Writing
(e) Precis and Comprehension
(f) Idioms and Proverbs
(g) Literary Criticism
(h) Poetry
(i) Vocabulary, Phonotics, Grammar etc. etc.

Duration: 4 months
Commencement: 5th March
Lectures on Saturdays & Sundays 4-00 to 5-30 p.m.
Course fee: Rs. 350/- only
Lectures: KANDIAH NAVARENDRAN

**● SPOKEN ENGLISH:** (a crash course)

வயது வந்தவர்களுக்கும்
உத்தியோகம் பார்ப்பவர்களுக்கும்

Lectures on Tuesdays & Thursdays 4-00 to 5-30 p.m.
Commencement: 14th March
Course fee: Rs. 150 - only
Lectures: KANDIAH NAVARENDRAN

Lack of knowledge of spoken English leads to tragic linguistic accidents. We'll help you to avoid them lest not your future suffer owing to lack of spoken English. If you are ready for a move—take the first step in the right direction by coming to us.

9, றக்கா லேன்,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.



அண்ணா தொழிலகம்
இணுவில்

வாடிக்கையாளர்களே!
உங்களுக்கு ஓர் நற்செய்தி

● அரிசி மா
● வறுத்த அரிசிமா
● வறுத்த உழுத்தம்மா

பக்கட்டுகளாகவும் சாக்குகளிலும் (சொரியாகவும்) தொகையாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளக் கூடிய ஓரேயொரு இடம்.

அண்ணா
கோப்பிக்கடை,
யாழ்ப்பாணம்.


## ஊரடங்கு நேரம் குடாநாடு முழுவதும் 9 மணி ஆக்கப்படும்

யாழ்ப்பாணம், மார்ச் 3

வெகு விரைவில் குடாநாட்டின் எல்லாப்பகுதிகளிலும் ஊரடங்குநேரம் இரவு 9 மணியாக்கப்படும். இதற்கான உத்தரவு சகல அமைதிப்படை முகாம்களுக்கும் அனுப்பி வைக்கப் பட்டதும் இந்நடைமுறை அமுலுக்கு வரும்

அமைதிப் படையின் உயரதிகாரி ஒருவர் உதயனுக்கு இதனைத் தெரிவித்தார்.

தற்போது யாழ் குடாநாட்டில் ஊரடங்கு உத்தரவு அமுல் படுத்தப்படும் நேரம் 9 மணி என்று அறிவிக்கப்பட்ட போதிலும், பருத்தித்துறை, நெல்லியடி கோப்பாய்ப் பகுதிகளில் 7 மணியுடனேயே ஊரடங்கு உத்தரவு அமுல் படுத்தப்பட்டு விடுகிறது. (இ-9-10)


அறிவித்தல்

யா/மாவட்டத்தில் 1983ம் ஆண்டு முதல் வன்செயல்களால் பாதிக்கப்பட்டவர்கள் குறிப்பாக இறந்தவர்கள், காயமடைந்தவர்கள், வேலை இழந்தவர்கள், (திரை அரங்கு ஊழியர்கள், கடைச்சிப்பந்திகள், கூலிவேலை, தச்சுவேலை, மேசன், ஏனைய தொழிலாளர்) உடைமைகள் இழந்தோர் ஆகியோரின் விபரங்கள் புனர்வாழ்வு அமைச்சுடன் தொடர்பு கொள்வதற்காக சேகரிக்கப்படுகின்றது. தங்கள் முழுவிபரங்களுடன் கடிதமூலம் கவோ அல்லது நேரடியாகவோ தொடர்பு கொள்ளவும்.

புனர்வாழ்வு அமைச்சினால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

செயலாளர்
சமூக அபிவிருத்திச் சபை
நம். 13, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்.
(1790)


## கிளிநொச்சியில் குண்டுச் சத்தம்

கிளிநொச்சி மார்ச் 3

கிளிநொச்சியில் திங்கள் இரவு பலத்த குண்டுச் சத்தங்களும், துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் கேட்டன. இதனைத் தொடர்ந்து மக்கள் பதற்றம் அடைந்தனர்.

பரவிப்பாஞ்சான் பகுதியில் தனிநபர் இருவரது வீட்டுக்கு அருகில் இரவுவேளை இனந்தெரியாதவர்களால் கைக்குண்டுகள் வீசப்பட்டதே இச்சத்தத்துக்குக் காரணம் எனத் தெரிய வருகிறது.

பரவிப்பாஞ்சான் பகுதியில் இருந்து வந்த குண்டுச் சத்தத்தைக் கேட்டு இந்திய இராணுவம் இரவிரவாகத் துப்பாக்கிவேட்டுக்களைத் தீர்த்ததாகக் கூறப்பட்டது. (ஒ-76)

## மாகாண சபையின்கீழ் இவை...

கொழும்பு, மார்ச் 3

நாட்டில் உள்ள தனியார் ஆஸ்பத்திரிகள் மாகாண சபையின் கீழ் கொண்டுவரப்படும்.

போதனா ஆஸ்பத்திரிகள் அமைச்சு இதற்கு அங்கீகாரம் அளித்திருக்கின்றது

நாட்டில் சுமார் ஆயிரம் தனியார் ஆஸ்பத்திரிகள் இயங்குகின்றன.

தற்போது இவை போதனா ஆஸ்பத்திரிகள் அமைச்சின் மேற்பார்வையில் இயங்குகின்றன. (ஓ-எ)

## இலங்கை - - ---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாளர் மத்தியில் பேசுகையில் அவர் மேலும் சொன்னதாவது:

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவி, நிவாரண வேலைகள் இலங்கை முழுவதையும் மையமாகக் கொண்டது: வடக்கு-கிழக்கை மட்டும் மையமாகக் கொண்டதல்ல-இப்படி அவர் சொன்னார். [இ-எ]


★ வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க ★



இயேசு ஜீவிக்கிறார்

சுகமளிக்கும் மகாநாடும்
ஊழியர் பயிற்சி முகாமும்

கண்ணீருக்கு கரை உண்டா?
கடலுக்கு அமைதி உண்டா?
கற்டனைக்கு எல்லை உண்டா?

இந்த கர்பனை உலகத்தில் கடவுள் இல்லை என்று போய்விட்ட கோடிக் கணக்கானோர், கற்டனையில் தெய்வம் என்று அங்கலாயித்த ஒரு கோடிக் கணக்கானோர் தெய்வம் இல்லை என்று திசை மாறும் கூட்டத்தினர் ஒருபுறம் இச் சூழ்நிலையில் எம் கண்ணீருக்கு முடிவு காணும் விதமாக தெய்வத்தின் திருப்பாதத்தில் இதோ ஒரு சந்தர்ப்பம்!



திடீரென ஏற்பட்ட பாரிச வாதத்தால் 2 கால்களும் வழங்காத நிலையில் இருந்த இவர் ஜெபத்தில் விடுதலை கண்டார்.



11 வருட எக்ஸிமா நோயிலிருந்து சுகமானார்.



பரம்பரையாக தொடர்ந்து வந்த சயரோகம் இயேசு சுவாமியின் திருவருளால் சுகமானார்.

காலம்: மார்ச் 4 முதல் 13 வரை.
[ஊழியர் பயிற்சிமுகாமும் வேதப்படிப்பும்]

மார்ச் 6 முதல் 13 வரை
[சுவிஷேச மாநாடும் விடுதலை ஆராதனையும்]

இடம்: சுகததாச உள்ளரங்கம்

(கொழும்பு) மாலை 5-30 மணிக்கு

செய்தி: சகோ. S.இராஜேந்திரம்

இதில் கலந்து இனுமாக விடுதலை பெற்றுக் கொள்ளுங்கள்

வட, கிழக்கு மாகாண மக்களுக்கு சலுகை வழங்கப்படும்

மேற்குறிப்பிட்ட சாட்சி உங்கள் வாழ்விலும் நிறைவேறும் வாருங்கள்.

தொடர்பு:- இயேசு ஜீவிக்கிறார்,
த.பெ.இல: 1044, கொழும்பு.
(1748)

தேவை

அரிய சந்தர்ப்பம்

அகில இலங்கை
பரஸ்பர சகாய நிதிச் சங்க லிமிட்டெட்,
வட்டுக்கோட்டை.

மேற்படி ஸ்தாபனத்தில் பயிற்சியாளராக (வங்கிச்சேவை, கணக்கியல், கிராம அபிவிருத்தி தொடர்பான வேலைகள்) பழக்குவதற்கு ஆண் - பெண் இருபாலாரும் தேவைப்படுகின்றனர்.

1. வயதெல்லை:- 21க்கு மேல்
2. கல்வித்தகைமை:- கனிஷ்ட பொதுத் தராதரப் பத்திரம் G.C.E (O/L) ஆனல் சிரேஷ்ட பொதுத் தராதரப் பத்திரமுடையோர் விருப்பத்தக்கது.
3. பயிற்சிக்காலம்:- 6 மாதங்கள்
4. வதிவிடம்:- காரியாலயத்திற்கு அண்மையில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

தெரிவு செய்யப்படுபவர்கள் பயிற்சிக் காலம் முடிவடைந்தபின் சங்கத்தின் சேவையில் அமர்த்தப்படுவார்கள்.

11 12, 13, 3 88 திகதிகளில் சான்றிதழ்களுடன் காரியாலயத்திற்கு நேரில் வரவும்.

தபாற் கந்தோரடி, வட்டுக்கோட்டை.
வே. இ. புவனஈஸ்வரன்
தலைவர்
(1791)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 03-03-1988ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. 292/2 Navalar Road, Jaffna on Thursday, 3rd March 1988



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org